**OPEN ACCESS**

Volume: 5

Issue: 1

Month: July

Year: 2020

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 30.04.2020

Accepted: 12.06.2020

Published: 01.07.2020

Citation:
Nirmal Karunakaran, T. (2020). Child Language. *Shanlax International Journal of Tamil Research*, 5(1), 78–83.

DOI:
https://doi.org/10.34293/tamil.v5i1.3411

*Corresponding Author:
karunapgt@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Child Language

**T. Nirmal Karunakaran**
*Ph.D Scholar, Indian Languages Center*
*Jawaharlal Nehru University, New Delhi, India*
https://orcid.org/0000-0002-1156-4165

**Abstract -** Valluvar says of the child's language, "He who does not listen to the words of his people." The language of the child is different from the language spoken by the children and the language spoken for the children.
Children's language is the way in which children absorb and reflect on the element that parents speak in their own language. Children's cognition is related to the phonetic notes of the language spoken by those around them and to the phonetic notes of the properties of the objects.
From the age of two to five, children perceive the sounds of words according to their comprehension and manipulate language with phonetic notes in response to them. Despite the differences in the languages used by man, there are still variations on the family language, the community language, and the written language.
The child can understand the nature of such language changes according to his experience in the difficulties that appear in its use of language.

**Key Words:** Linguistics, Child's Language, Meta Cognition, Phonetic Notes, Sounds of Words, Family Language.

**References**

1. Varadarajan, M, Language History, Pari Book Center, Chennai.
2. Rajaram, Language and Language discipline,
3. Porco, Linguistic Thoughts.

# குழந்தை மொழி

***த. நிர்மல் கருணாகரன்***
முனைவர் பட்ட ஆய்வாளர், இந்திய மொழிகள் மையம்
ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகம், புதுதில்லி

***ஆய்வுச்சுருக்கம்:*** *தம் மக்களின் மழலைச் சொல் கேளாதவர் என்று குழந்தையின் மொழி பற்றி வள்ளுவர் கூறுகிறார். குழந்தையின் மொழி என்பதும், குழந்தைகள் பேசும் மொழி என்பதும், குழந்தைகளுக்காகப் பேசும் மொழி என்பதும் வெவ்வேறானவை.குழந்தைகளின் மொழி என்பது பெற்றோர்கள் தங்களின் மொழிகளைக் கூறும் கூறுபாட்டிலிருந்து குழந்தைகள் உள்வாங்கிக் கொண்டு பிரதிபலிப்பது. அவர்களின் புலனறிவு, உடல்வளர்ச்சி, மொழியின் நாட்டம் ஆகியவற்றினோடு குழந்தைகளின் மொழி என்பதைப் பொருத்திப் பார்க்கலாம். குழந்தைகளின் புலனறிவு என்பது தன்னைச் சுற்றியுள்ளோர் பேசும் மொழியின் ஒலிக் குறிப்புகளையும், புழங்குபொருட்களின் தன்மைகளின் ஒலிக் குறிப்போடும் தொடர்புடையது. குழந்தைகள் இரண்டாம் வயதிலிருந்து ஐந்தாம் வயது வரை சொற்களின் ஒலிகளைத் தன் புரிதலுக்கேற்பக் உள்வாங்கி உணர்ந்து அவற்றின் பிரதிபலிப்பாக ஒலிக்குறிப்புகளோடு மொழியைக் கையாளுகின்றனர். மனிதன் பயன்படுத்தும் மொழிகளில் பல்வேறு தன்மைகள் இருந்தபோதிலும் குடும்பம் சார்ந்த மொழிக்கும், சமூகம் சார்ந்த மொழிக்கும், எழுத்துமொழிக்கும் மாற்றங்கள் இருக்கத்தான் செய்கின்றன. குழந்தைகள் இத்தகைய மொழி மாற்றங்களின் தன்மைகளை தனது அனுபவத்திற்கேற்ப புரிந்து கொள்வதை அதன் மொழிபயன்பாட்டில் தோன்றும் இடர்பாடுகளில் புரிந்து கொள்ளலாம்.*

***முக்கியச் சொற்கள்:*** *குழந்தையின் மொழி, மெட்டா அறிவாற்றல், ஒலிப்பு குறிப்புகள், சொற்களின் ஒலிகள், குடும்ப மொழி*

## முன்னுரை

தம் மக்களின் மழலைச் சொல் கேளாதவர் என்று குழந்தையின் மொழி பற்றி வள்ளுவர் கூறுகிறார். குழந்தையின் மொழி என்பதும், குழந்தைகள் பேசும் மொழி என்பதும், குழந்தைகளுக்காகப் பேசும் மொழி என்பதும் வெவ்வேறானவை. குழந்தைகளின் மொழி என்பது பெற்றோர்கள் தங்களின் மொழிகளைக் கூறும் கூறுபாட்டிலிருந்து குழந்தைகள் உள்வாங்கிக் கொண்டு பிரதிபலிப்பது. அவர்களின் புலனறிவு, உடல்வளர்ச்சி, மொழியின் நாட்டம் ஆகியவற்றினோடு குழந்தைகளின் மொழி என்பதைப் பொருத்திப் பார்க்கலாம். குழந்தைகளின் புலனறிவு என்பது தன்னைச் சுற்றியுள்ளோர் பேசும் மொழியின் ஒலிக் குறிப்புகளையும், புழங்குபொருட்களின் தன்மைகளின் ஒலிக் குறிப்போடும் தொடர்புடையது. குழந்தைகள் இரண்டாம் வயதிலிருந்து ஐந்தாம் வயது வரை சொற்களின் ஒலிகளைத் தன் புரிதலுக்கேற்பக் உள்வாங்கி உணர்ந்து அவற்றின் பிரதிபலிப்பாக ஒலிக்குறிப்புகளோடு மொழியைக் கையாளுகின்றனர். மனிதன் பயன்படுத்தும் மொழிகளில் பல்வேறு தன்மைகள் இருந்தபோதிலும் குடும்பம் சார்ந்த மொழிக்கும், சமூகம் சார்ந்த மொழிக்கும், எழுத்துமொழிக்கும் மாற்றங்கள் இருக்கத்தான் செய்கின்றன. குழந்தைகள் இத்தகைய மொழி மாற்றங்களின் தன்மைகளை தனது அனுபவத்திற்கேற்ப புரிந்து கொள்வதை அதன் மொழிபயன்பாட்டில் தோன்றும் இடர்பாடுகளில் புரிந்துகொள்ளலாம்.

குழந்தைகளுக்காகப் பெற்றோர் உள்ளிட்ட சமூகத்தினர் பேசும் மொழி என்பது கவனிக்கப்பட வேண்டியது.தாய்மொழி என்பது இங்கு முதன்மை பெறுகிறது. பின் நாட்டார் மொழிகளின் கூறுகளோடு வழக்குச் சொற்களும், கிளைமொழிச் சொற்களும் பயன்படுவதைக் காணலாம். வழக்கு, கிளைமொழிச் சொற்களின் உச்சரிப்பு கூறுகள் சற்றே வேறுபட்டனவாகவும், அதன் ஒலிக்குறிப்புகள் சொற்களின் தன்மைகளில் மாறுபடுவதையும் குழந்தை உற்றுநோக்குகிறது. தாய்மொழி கற்றலில் பொதுச்சொற்கள் என்பதும் வழக்குச் சொற்கள், கிளைமொழிச் சொற்கள் என்பனவற்றில் உள்ள ஒலிக்குறிப்புச் சிக்கல்கள் மற்றும் எதிர்நிலை கருத்து சார்ந்த ஒலிப்புகளைக் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுப்பதில் குழந்தைகளுக்கான மொழியில் மாற்றம் உண்டாவதை உணரமுடிகிறது. பெற்றோர்கள் உள்ளிட்ட சுற்றத்தார்கள் தங்களுக்கான உச்சரிப்புகளோடும் புழங்குசொற்களின் தன்மைகளோடும் குழந்தைகளை அணுகுகையில் குழந்தைகளின் மொழி என்பது வேறுபடுகிறது. இத்தகைய வேறுபாட்டினை, அழுநிலை, பேச்சுநிலை, செங்கீரை நிலை முதலியவற்றின் மூலம் அறியலாம்.

## குழந்தைப் பருவம் என்பதின் வரையறை

குழந்தைப் பருவம் என்பது இலக்கியத்திலும், கல்வி சார்ந்த வளர்ச்சி தன்மையிலும் குழந்தை பிறந்து முதல் நான்கு, ஐந்து ஆண்டுகள் என்ற கணக்கிட்டு அடையாளப்படுத்தினாலும், இரண்டிற்குமான வரையறைகள் என்பது வேறுவேறாக உள்ளன. தமிழ்ச் சிற்றிலக்கியங்களில் ஒன்றான பிள்ளைத்தமிழ் குழந்தைகளின் வளர்ச்சியைப் பற்றிக் குறிப்பிடுகிறது. குழந்தை என்பது குழவி என்ற சொல்லில் கையாண்டாளும், இச்சொல் தொல்காப்பியத்திலிருந்தே எடுக்கப்பட்டுள்ளது. குழவி மருங்கினும் கிளவதாகும் என்பதில் குழவி என்ற சொல் குழந்தை என்ற பொருளில் உள்ளதென அறிஞர்கள் விளக்குகிறனர். குழந்தை பிறந்து முதல் இரண்டு ஆண்டுகளில் அதற்கான அடிப்படை வளர்ச்சி நிலைகளைப் பற்றிக் கூறுகிறது. அதன் பாடுபொருள் என்பது வேறாக இருந்தபோதிலும் பாடுபொருளின் மையம் குழந்தையின் வளர்ச்சி பற்றியதாகவும் அதில் மொழி பேசுதல் என்பது ஒரு கூறாகவும் அடையாளம் காணப்படுகிறது. காப்பு, தால் என்பதில் குழந்தை பற்றிய கண்ணோட்டம் இருந்தாலும் அதில் பெரியவர்களின் மொழியே உள்ளது. ஆனால் செங்கீரையில் குழந்தைகளின் மொழி உள்ளது. "கீர்ர்" என்ற ஒலிக்குறிப்பிலிருந்தே செங்கீரை தோற்றம் பெற்றுள்ளது என்னும்போது அது குழந்தையின் முதன் பேச்சுமொழியான ஒலிக்குறிப்பு. விரிவாகச்சொல்லப்போனால் மழலை மொழியின் தொடக்கம் என்று சொல்லமுடியும்.

குழந்தையின் உடல் வளர்ச்சி என்பது அதன் மொழி வளர்ச்சியோடு இணைத்துப் பார்க்கப்படுகிறது. குழந்தை பிறந்த நான்கு மாதங்களில் தலைநிமிர்தல், ஆறு மாதத்தில் உட்காருதல், பத்து மாதத்தில் தவழுதல், பதினெட்டு மாதத்தில் குறுநடை போடுதல் போன்ற வளர்ச்சியின் அதன் பேச்சும் வளருகிறது. கத்துதல், ஒலியெழுப்புதல், ஒலி உள்வாங்குதல், அதற்குப் பதில் ஒலிகளை மொழிதல், பதினெட்டு மாத்த்தில் திருத்தமான வார்த்தைகளைச் சொல்ல முயலுதல் எனபதும் ஒரே வளர்ச்சியினால் அமைந்தவை.

## அழுநிலை

குழந்தை பிறந்தவுடன் அதன் முதல் ஒலி அழுகை. அழுகை குழந்தையின் முதல் நிலை என்றாலும் அது ஒரு செயல் சார்ந்தது. அச்செயல் இயல்பாகவே குழந்தைக்குள் அடங்கிவிடுகிறது. குழந்தை அழுதல் என்பது காலப்போக்கில் அதனைப் பாதுகாப்போர்களால் அர்த்தப்படுத்தப்படுகிறது. அழுதல் என்பது ஒரு வினையாயினும் அது பொருள் குறித்த கருத்துநிலையாக மாறுகிறது. அதன் பிரதிபலிப்பு பொருளுள்ளஒருவார்த்தையாகவும்,அதற்குப் பதில் சொல்லும் முறையாக மற்றோர்கள்

அர்த்தம் கற்பிக்கின்றனர். உதாரணமாக, பிறந்தவுடன் சாதாரண நிலையில் அழும் குழந்தைக்குப் பால் அருந்துவது, அது ஏதாவது நிகழுகிறதா என்பதான கவனிப்புகள் அக்குழந்தையின் தொடர்புமுறையிலான ஒலியாக மாற்றம் பெறுகிறது. பசி, அது தொடர்பான மற்ற கருத்து வெளிப்பாடாக குழந்தை அழுகையைக் கையாளுவது தெரியவருகிறது. குழந்தை தனக்கு ஒரு தேவையை நிறைவேற்றவும், தான் விரும்பும் ஒன்றை வெளிப்படுத்தவும், மறுதலிக்கவும் அழுகை என்ற ஒலிக்குறிப்பு, பிறரைத் தொடர்புகொள்ளும் ஒலிக்குறிப்பாகவும் பயன்படுத்துவதைக் காணமுடிகிறது.

### செங்கீரைப் பருவம்

செங்கீரைப் பருவம் என்பது குழந்தை பிறந்து நான்கு மாதங்களில் தொடங்கும் பருவமாக அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். கீர்ர் என்ற ஒலியைக் குறிக்கும் பருவமாகச் சொல்லலாம். குழந்தை ஒலிக்குறிப்புகளை அதாவது பல்வேறு ஒலிகளைத் தன்னுள்ளே எழுப்பும் பருவம் ஆகும். எழுப்பப்படும் ஒலிகள் எல்லாம் பொருளுடையது என்பதில்லை. மொழி வழகும் அப்படியில்லை. குறிப்பிட்ட வடிவமுடைய ஒலிகளுக்கு அதற்குகந்த பொருள்கள்க் கற்பிக்கப்படுகின்றன. குழந்தை தன் கருத்தை வெளியிடும் விருப்பத்தையும், விளையாட அழைக்கும் விருப்பத்தையும் குறிக்கக்கூடிய பருவமாக இதைக் காணலாம். நாக்கை அசைப்பதும், நாக்கின்வழி ஒலி எழுப்புவதும் அதன் விளையாட்டுக் குறிப்புகளாக புரிந்துகொள்ள முடிகிறது. அத்தகைய ஒலி குறிப்புகள் விளையாட்டு ஒலியாக அடையாளப்படுத்துகிறோம். ஆகவே, செங்கீரைப் பருவத்தை விளையாட்டின் ஒலிக்குறிப்புபருவமாகஅடையாளப்படுத்த முடிகிறது.

### பேச்சுநிலை

செங்கீரைப் பருவத்தின் அடுத்தநிலையே பேச்சுநிலை வளருகிறது. பேச்சு ஒலிக்குறிப்பு என்றபோதிலும் அது பிரதானமாக வரையறுக்கப்பட்ட ஒலி வடிவமாகும். அனைவரும் அறிந்த ஒலிகளால் வடிவமைத்து அர்த்தப்படுத்தப்பட்ட வடிவமே பேச்சு ஆகும். குழந்தையின் அர்த்தமில்லா ஒலிகளிலிருந்து திருத்தப்பட்ட ஒலிகளாக அடையாளப்படுத்தப்படுவதே பேச்சு ஆகும். நாக்கின் அசைவால் பிறக்கும் ஒலிகள் ஆ, ஊ, நா, லா, பா போன்ற ஒலிகள் குழந்தையின் வடிவத்தில் அர்த்தமில்லாதாக இருந்தாலும், அதனை ஓரெழுத்து ஒரு மொழியாக சில ஒலிக்குறிப்புகளுக்கு அர்த்தம் உண்டு. இதனைத் தனி மொழி என்றும் கூறுவர். இதுவே அடுத்த ஒலிகளாக வளருகையில் ஈரெழுத்து இருமொழியாகவும், பின்பு தொடர்மொழியாகவும் மாறி அர்த்தமுள்ள பேச்சு உருவாவதைக் கண்டுணரமுடிகிறது.

### ஒலி வளர்ச்சி

பேச்சு ஒலிகளைக் குழந்தைகள் பெற்றோர்களிடமிருந்து பெற்றுக் கொள்கின்றனது. ஓரசை வார்த்தைகளைச் சைகை மொழியோடு கலந்து பேசுவதும். அசைவுகளால் வெளிப்படுவதும் இயல்பாக அமைகிறது. அசைவையே பிரதானமாகக்கொண்டு பின் அதனோடு வார்த்தைகளை இணைத்துக் குழந்தைகள் தங்கள் கருத்துகளைத் தெரிவிக்கின்றனர். சில சுயம் சார்ந்த தேவைகளையும் வெளிப்படுத்துவதில் தொடர்புடைய ஒலிக் குறிப்புகளைக் குழந்தைகள் முதலில் கற்றுக்கொள்கின்றன. அதோடு பெற்றோர் ஒலிக்கும் ஒலிக்குறிப்புகளையும் வார்த்தைவடிவங்களையும்உள்வாங்கிப்பேசும் ஆற்றலை வளர்க்கின்றனர். பொருள்களின் பெயர்களை அறியும் திறனுக்கும் முன் பொருள்களை பயன்படுத்தும்போது தோன்றும் ஒலிகளை உள்வாங்கி இந்த ஒலி இந்தப் பொருளிலிருந்து பிறக்கிறது என்பதைக் கற்றுக் கொள்கின்றனர். பின்பே அவ்வொலி சார்ந்த பொருள்கள் எது என்பதையும் அதன் பயன்பாடு என்ன என்பதையும், அப்பயன்பாடு தொடர்பான வார்த்தைகளை அதன் ஒலிக்குறிப்போடு இணைத்து கற்றுக்கொள்ள முடிகின்றதைக் காணமுடிகிறது.

இத்தகைய சந்தர்ப்பங்களில் ஓரசையாக வரும் ஒலிகளையும் அதன்பின் ஈரசையாக வரும் வார்த்தைகளையும் அடையாளம் காணுவதை அறியும் குழந்தைகள் ஒலிகளை இணைத்துப்பேச்சினைஉள்வாங்குகின்றன. பின் மூவசை, நாலசைச் சொற்களை ஓரசை, ஈரசைச் சொற்களாகவே அடையாளப்படுத்தி பேசுகின்றனர். ஒரு வார்த்தை அதன் முதன் எழுத்தின் ஒலியை உச்சரித்தல், பின் இரண்டாவது எழுத்தை உச்சரித்தல், அதன்பின் வார்த்தை சிதைவாக உச்சரித்தல், அதன் முழுமை பெற்ற திருந்தாவடிவம், பின் முழுமை பெற்ற வடிவம் ஆகிய தன்மைகளில் பேச்சு நிகழுகிறது. இத்தகைய முயற்சியையே மழலைப் பருவம் என்கிறோம்.

குழந்தைகளுக்கு ரகரமும், றகரமும் முதலில் ஒலிக்க வருவதில்லை.முறுக்கு என்பதை முக்கு என்றும், பருப்பு என்பதைப் பப்பு என்றும் என்றும் உச்சரிக்கின்றனர். எல்லாக் குழந்தைகளும், தொடக்கத்திலேயே அனைத்து விதமான ஒலிகளையும் ஒலிப்பதில்லை. சில குழந்தைகளுக்கு வரும் ஒலிகள், வேறு சில குழந்தைகளுக்கு வருவதில்லை. தொண்டையின் அமைப்பு உச்சரிப்பு, தெளிவு, ஒலியை உள்வாங்கலின் அறிவு ஆகியவற்றைக்கொண்டு பேச்சு பிறக்கிறது. பேச்சு தொடங்க ஒலிகளைஉள்வாங்கிப்பேசும்செயலிலேயே ஒரு குழந்தையின் அறிவுநுட்பத்தைப் புரிந்துகொள்ள முடிகிறது.

**கருத்து வளர்ச்சி**

குழந்தையின் பேச்சு பிற்காலத்தில்தான் கருத்து நிலையில் மாறுகிறது. தொடக்கத்தில் ஒரேகருத்தை அனைத்து வார்த்தைகளுக்கும் என்று கற்றுக்கொண்ட குழந்தை தான் பயன்படுத்தும் பொருளிலிருந்தும், தாம் உண்ணும் உணவிலிருந்தும் வேறுவேறு என்பதான புரிதலை உருவாக்கிக்கொள்கிறது. ஒவ்வொரு வேறு சொல்லும் ஒரே பொருளைக் குறிக்கும் என்று தொடக்கத்தில் அறிகிறது. உதாரணமாக, தொடக்கத்தில் தனது அப்பாவை முகம் பார்க்கும் குழந்தை, அப்பாவுக்கான முக அடையாளத்தைவிட உடை, தோற்றம் என்று சில அடையாளத்தை வைக்கிறது. தன் அப்பாவைத்தவிர அவரை ஒத்த சாயலைக் கொண்ட பலரை அப்பா என்ற அழைப்பதைக் காணமுடிகிறது. பார்ப்பவர்களில் சிலரை அப்பா என்றே அழைக்கிறது. சில அடையாளங்கள் மனதில் பதியும்போதும் யாரேனும் அவர் அப்பா இல்லை என்ற கூறியபின் உற்றுநோக்குகிறது. பின்பே தன் தந்தைக்கும் பிறருக்கும் அடையாளத்தை அறிந்துகொள்கிறது. பின்புஅப்பாஎன்றஒலிக்குறிப்புதந்தைக்கும் பிறருக்கும் அவர் சார்ந்த ஒலிகளைப் பயன்படுத்துகின்றது. இதனைக் கருத்து வளர்ச்சி என்று அடையாளப்படுத்தலாம். தான் பேசும் வார்த்தையில் உள்ள பொருளை ஒப்புமை கருதியே குழந்தைகள் கண்டுணருகின்றன.

மொழி நூலறிஞர் யெஸ் பர்ஸன் என் குழந்தை எவ்வாறு எண்களைக் கற்கிறது என்று ஆராய்ந்து சில குறிப்புகளை விளக்கினார். வேனிற் காலத்தில் வெளியே செல்ல நேர்வதால் மற்ற காலத்தில் வீட்டினுள் இருந்து கற்றவற்றை அக்குழந்தை மறந்து விடுகிறது. முதலில் கற்ற எண்களை மறந்து விட்டு மறுபடியும் அவற்றையும் அவற்றிற்கு மேற்பட்டவற்றையும் கற்கிறது எனக் குறிப்பிடுகிறார். குழந்தை தவறில்லாமல் பத்து வரையில் எண்ணுவதே பெரிய வெற்றியின் செயலாகும். ஒன்று அறிந்து இரண்டு என்னும் எண்ணைக் கற்கும்போது ஒன்றுக்கு மேற்பட்ட எல்லாவற்றையுமே இரண்டு என்று குறிப்பது குழந்தையின் இயற்கை. மூன்று கற்றபோது ஐந்து பழத்தைப் பார்த்தாலும் மூன்று என்றே சொல்லும். பத்துப்பழத்தைப் பார்த்தாலும் மூன்று என்றே சொல்லும். இப்படியே மற்ற எண்களையும் படிப்படியாகக் கற்றுக் கொள்கிறது.

## முடிவுரை

குழந்தைகள் பல்வேறுவிதமான ஒலிக்குறிப்புகளிலிருந்து மொழிகளைக் கற்றுக்கொள்கின்றன. அழுதலில் தொடங்கி விளையாட்டு ஒலிகளைக் கற்றுப் பின் பிறரது பேச்சுக்களின் ஒலிகளை உள்வாங்குவதன் மூலம் ஒலிகளின் தன்மைகளைப் புரிந்துகொள்கிறது. பின்பே ஒலிகளின் தன்மைகளுக்கேற்ப கருத்துநிலைகளை வளர்த்துக்கொள்கிறது. ஒலிகளை மொழிகளாக அடையாளப்படுத்தி புரிந்துகொள்ளும் தன்மை குழந்தைகளின் அறிவுத்திறனுக்கேற்பவே அமைகிறது என்பது குழந்தைகள் ஒலிகளை உள்வாங்கும் திறனை உற்றுநோக்குவதன் மூலம் புலப்படுகிறது.

## துணை நின்ற நுல்கள்

1. மு. வரதராசன், மொழி வரலாறு, பாரி புத்தக நிலையம், சென்னை.
2. இராசாராம், மொழியும் மொழியிலும்,
3. பொற்கோ, மொழிசார் சிந்தனைகள்.